2nd March 1965]

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்: திருநெல்வேலி ஜில்லாவில் மழை இல்லாமல் நஞ்சைகள் எல்லாம் அதிகமாகத் தீய்ந்து விட்டதால் இந்தத் தருணத்தில் பஞ்ச நிவாரண வேலையாக அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கக் கூடிய வகையில் கால்வாய்ப் புனரமைப்பு வேலைகளை ஒன்றிரண்டு மாதங்களுக்குள்ளாக எடுத்துக் கொள்ள அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இப்போது இருக்கக்கூடிய நிலையைப் பயன்படுத்தி துரிதமாக வேலையைச் செய்ய வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். எங்கெங்கு எஸ்டிமேட்ஸ் பூர்த்தியாகி இருக்கிறதோ அங்கெல்லாம் துரிதமாக வேலைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இந்த வேலை நடைபெறுததால் பாதிக்கப்பட்டிருக்கும் பகுதிகளில் கிஸ்தி பாக்கி கட்டாயப்படுத்தி வசூல் செய்வதாக தகவல் வந்திருக்கிறது. அந்த பாக்கி வசூல் செய்வதை ஒத்தி போடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா: வேலை நடந்த பகுதி நடக்காத பகுதி என்ற பிரச்சினை இல்லை. இந்த ஆண்டு திருநெல்வேலி ஜில்லாவில் போதிய மழை இல்லை. அதனால் விவசாயிகளுக்கு பாதகம் ஏற்பட்டிருக்கிறது. இதை எல்லாம் முறையாகப் பரிசீலனை செய்யவேண்டும் என்பதற்காக போர்டு மெம்பர் ஒரு சில தினங்களுக்கு முன்பு அங்கு போய்ப் பார்த்து என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பதற்காக சென்றிருக்கிறார்கள். அவர்கள் ஆலோசனையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஏதோ கிஸ்தி வஜா மட்டும் செய்து விட்டால் போதாது. அங்குள்ள ஏழை விவசாயிகளுக்கு அடுத்த பருவ மழை வரை வேலைவாய்ப்புகள் தேடிக் கொடுக்க வேண்டும். ஆகவே இதை அதி தீவிரமாக கவனிக்க வேண்டுமென்றுதான் போர்டு மெம்பரை போய் பார்த்து வரச் சொல்லியிருப்பது.

Implementation of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963.

* 130 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Food be pleased to state with reference to Legislative Assembly Question No. 235 answered on 12th March 1964—

(*a*) the present stage of the steps taken to implement the Madras Inam Estates (Abolition and Conversion into Rotwari) Act, 1963;

(*b*) whether the rules have been issued under this Act; and

(*c*) if not, the reasons for the delay?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) & (*b*) The Government have sanctioned the appointment of staff for settlement operations under the Act. The rules under the Act have also been issued.

(*c*) Does not arise.

[2nd March 1965

திரு. மீ. கலியாணசுந்தரம்: இந்த விதிகள் பிறப்பிக்கப்பட்டு பத்து தினங்கள்தான் ஆகிறது. ஒன்றரை ஆண்டுகள் கழிந்தாவது அரசாங்கம் இவ்வளவு வேகமாக விதிகள் பிறப்பித்ததற்கு நன்றிதெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக நிர்வாகத்தில் சிலரை நியமித்திருப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் நியமிக்கப்பட்டு பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதில் இனும் எஸ்டேட் அபாலிஷன் ஆக்ட் முக்கியமானது. அதை அமுல் நடத்த என் உத்தரவுகள் பிறப்பிக்கப்படவில்லை?

THE HON. SRI V. RAMAIAH: I will read my answer again so that the hon. Member can understand it.

"The Government have sanctioned the appointment of staff for settlement operations under the Act".

இப்போது எடுக்காமல் இருந்தால் விரைவில் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இவை சம்பந்தப்பட்டதில் இனும் எஸ்டேட்ஸ் அபாலிஷன் ஆக்ட்தான் முக்கியமானது. மற்ற சட்டங்கள் பிப்ரவரி 15-ம் தேதியில் இருந்து அமுலுக்கு வருகிறது என்று உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு கெஸட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தச் சட்டத்தை பகுதி பகுதியாக அமுல் நடத்தலாம் என்று உத்தரவிட அரசாங்கத்திற்கு அதிகாரம் இருந்தும், இதுவரையிலும் எந்தவித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. இப்படி இந்தச் சட்டத்தைப்பற்றிய உத்தரவுகள் பிறப்பிக்கப்படவில்லை என்றால் இந்தச் சட்டத்தை திருத்தியும் பிரயோஜனமில்லை. அதிகாரிகளை நியமித்தும் பிரயோஜனம் இல்லை குறிப்பாக அமைச்சர் அவர்களின் தொகுதியான புதுக்கோட்டைப் பகுதிக்கு இது முக்கியமானது. அவருக்கு அங்கே சங்கடமும் ஏற்படும். ஆகவே இந்தச் சட்டத்தை அமுல் நடத்த எவ்வளவு காலத்திற்குள் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று அறியலாமா?

கனம் திரு. வெ. ராமையா: அதில் விசேஷ சங்கடங்கள் என்பது எல்லாம் பிரச்சினையல்ல. இந்தச் சட்டத்தின் விதிமுறைகள் ரெடியாக இருக்கிறது. அதை துரிதமாக நடைமுறைக்கு கொண்டுவர வேண்டுமென்று முயற்சிக்கப்படுகிறது. பிப்ரவரி 15-ம் தேதியில் இருந்து ஒரு set of rules தயாராகி நடைமுறைக்கு கொண்டு வந்திருக்கிறோம். மீதி விரைவில் நடைமுறைக்கு வரும் என்பது என் நம்பிக்கை.

SRI R. V. SWAMINATHAN: Sir, may I know from the Hon. Minister the reason for the delay in framing the rules though the Act was passed more than a year ago? What is the real difficulty?

THE HON. SRI V. RAMAIAH: Rules have to be framed and then published. It has taken some time.

2nd March 1965]

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஒன்றரை ஆண்டுகள் கழிந்து விதிகள் பிறப்பிக்கப்பட்டு விட்டன. இதில் முக்கியமான சட்டம் இனும் எஸ்டேட்ஸ் அபாலிஷன். அதில் மூன்ருவது பிரிவில் என்ன இருக்கிறது என்ருல் அரசாங்கம் அவ்வப்போது உத்தரவுகள் பிறப்பித்து அமுல் நடத்த வேண்டும் என்றிருக்கிறது. அந்த உத்தரவுகள் இன்னும் பிறப்பிக்கப்படவில்லை. அந்தச் சட்டம் இருந்தும், விதிகள் பிறப்பிக்க அதிகாரம் இருந்தும் அது நடைமுறைக்கு வரவில்லை. அந்த உத்தரவுகளை எப்போது பிறப்பிப்பார்கள்?

கனம் திரு. வெ. ராமையயா : தனிக் கேள்வி போட்டால் அந்தத் தேதியை திட்டவட்டமாகச் சொல்ல முடியும்.

திரு. க. ர. நல்லசிவம் : இந்தச் சட்டங்கள் துரிதமாக அமுல் நடத்தப்படவில்லை. விதிகள் பிறப்பிக்கப்படவில்லை. ஆகவே, இதனுல் பாதிக்கப்பட்டவர்களுக்கு சட்டம் அமலுக்கு வந்ததற்குப் பின்னுல் ஏதாவது விசேஷ பாதுகாப்பு கொடுக்க சர்க்கார் விசேஷமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுமா?

கனம் திரு. வெ. ராமையயா : சட்டம் எப்போது நடைமுறைக்கு வந்ததோ அப்போதிருந்து அவர்களுக்கு அந்த பாதுகாப்பு இருக்கிறது.

திரு. செ. மாதவன் : இனும் எஸ்டேட்ஸ் அபாலிஷன் ஆக்டில் பழைய பாக்கிகளை வசூலிக்க ஒரு தனி செக்ஷனிருக்கிறது. அப்பாயின்டட் டேட்டிலிருந்து அமுலுக்கு வரவேண்டும். செக்ஷன் 3-ன் படி நோட்டிபிகேஷன் வரவேண்டும். ஆனுல் இந்த சட்டத்திற்கு நோட்டிபிகேஷன் வரவில்லை. இதனுல் சட்டத்தில் குழப்பம் ஏற்படுகிறது. இதை நிவர்த்தி செய்ய அரசாங்கம் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறது?

கனம் திரு. வெ. ராமையயா : அங்கத்தினர் அவர்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால் அதை எழுதி அனுப்பினுல் அதுபற்றி போதிய கவனம் செலுத்தப்படும்.

பஞ்சாயத்துக்களிலுள்ள ரேடியோக்கள் (ரிப்பேர்)

* 131. **கேள்வி— திரு. இரா. நாராயணன் :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்துக்களில் உள்ள ரேடியோவில் ஏற்படும் ரிப்பேர்களை பஞ்சாயத்தே திருத்திக்கொண்டு அதற்குரிய செலவை பஞ்சாயத்துக் கணக்கில் ஈடு செய்ய வகை செய்யும் உத்திரவு பிறப்பிப்பது அரசாங்கத்தின் பரிசிலனையில் உள்ளதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இல்லை.

திரு. இரா. நாராயணன்: பஞ்சாயத்துக்களில் இயங்கும் ரேடியோக்களில் ரிப்போாகி மூன்று நான்கு மாதங்களாகியும் ரேடியோ சூப்பர்வைசர் ரிப்பேர் செய்வதில்லை. ஆர்.டீ.ஓ.-வைக் கேட்டால் உங்கள் ஆபீஸுக்கு வந்து ரிப்பேர் செய்யப்படும் என்று